**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No.370/2022**
**Deposition of witness for prosecution –PW–1**

| | | |
|---|---|---|
| Name | : | முத்துராம் |
| Father Name | : | நடராஜன் |
| Village | : | கல்குளம் |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | வனவர் |
| Religion | : | |
| Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 23rd day of July 2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மதுரை மாவட்டம் வன உயிரின சரகத்தில் வன உயிரின பிரிவில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சமயத்தில் கீழக்கரை வன உயிரின சரகத்தில் வனவராக பணிபுரிந்து வந்தேன். 13.08.2020 ம் தேதி வனச்சரக அலுவலருக்கு கிடைத்த தகவலின் படி சுமார் 11.00 மணியளவில் வன சரகர் தலைமையில் நானும் பெரிய பட்டிணம் வன காப்பாளர் திரு டேனியல் மற்றும் வேட்டை தடுப்பு காவலர்கள் ரெகுநாதபுரம் மயானம் வழி தடத்தில் ரோந்து பணி மேற்கொண்டு வந்தோம். அச்சமயம் 11.00 மணியளவில் கருநில கலர் ஆம்னி வேன் ஒன்று வந்தது. அதை நிறுத்தி சோதனை செய்த போது அதில் நான்கு வெட்டப்பட்ட கருப்பு கலர் கேனில் கடல் அட்டை இருந்தது. வண்டி எண் TN 65 AE 9127 ஆம்னி வேன் வண்டியை ஓட்டியவர் பெயர் அல் உதய். வண்டியை பின் தொடர்ந்து எமஹா இருச சக்கர வாகனத்தில் வந்த ஜாகீர் உசேன் வண்டி எண் TN 65 AJ 4764 அவர் அல் உதய் தனது மகன் என்றும் அவருடைய கடல் அட்டை தான் எனக்காக அவர் எடுத்து செல்கிறார் என்று கூறினார். அதன் அடிப்படையில் பொருட்களை கைப்பற்றி வன சரக அலுவலர்

அத்தாட்சி ஒன்றை தயார் செய்தோம். அந்த அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்தேன். அந்த அத்தாட்சியில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகும். பின்பு மேல் நடவடிக்கைக்காக வன சரகம்அழைத்து வந்து விசாரணை செய்தோம். மேலும் கடல் அட்டை மொத்தமாக 2173 எண்ணம் இருந்தது. பின்பு அவர்கள் இருவரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அல் உதய் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில்உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். பின்பு அவர்களை விசாரணை செய்த போது கடல் அட்டைகளை எங்கு எடுத்து செல்கிறீர்கள் என்று கேட்டபோது பெரிய பட்டிணம் பகுதியில் வண்ணாங்குண்டு உள்ள தோப்பில் அவிப்பதற்காக எடுத்துச்செல்வதாக சொன்னார். அதன்பின்பு விசாரித்து விசாரணை எதிரிகளை நீதிமன்ற காவலில் உட்படுத்தினார். எதிரிகளிடம் கைப்பற்றிய கடல் அட்டைகளை நீதிமன்ற நடுவர் எண் 1ல் வசம் ஒப்படைத்து வன உயிரின காப்பாளர் அலுவலகத்தின் முன்பு வைத்து அழித்தோம்.

<u>எதிரி தரப்பில் கு.வி</u>

நான் வனசரக அலுவலகத்தில் இருக்கும்போது தான் எனக்கு தகவல் வந்தது என்றா'ல் சரிதான். 11.00 மணிக்கு தான் தகவல் வந்ததா என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்திற்கும் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் 18 கிலோமீட்டர் என்றால் சரிதான். காரிலோ அல்லது பைக்கிலோ வந்தால் குறைந்தது அரை மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் பாக்கெட் டைரி வைத்திருக்கிறோமா என்றால் இல்லை. அறிக்கை புத்தகம் வைத்திருப்போம். அந்த புத்தகத்தில் அன்றாட பணிகளை குறித்து வைப்போம் என்றால் சரிதான். அன்றைக்கு இந்த வழக்கு விசாரணை செய்ததாக நான் குறித்து வைத்த அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். ரெகுநாதபுரத்தில் நான்கு சுடுகாடுகள் உள்ளது என்றும் அதில் எந்த சுடுகாடு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ரெகுநாதபுரம் மயானம் செல்லும் சுடுகாடு என்று சொல்லி உள்ளோம். நான் குறிப்பிடும் சுடுகாடு அருகே தெற்குப்பக்கமாக பெட்ரோல் பங்க் உள்ளது என்றால் சரிதான். வடக்கு பக்கம் கடைவீதி உள்ளது என்றால் சரிதான். கிழக்கு பக்கமாக கடைவீதி உள்ளது என்றால் சரிதான். மேற்கு பக்கமாக மின்சார அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடம் பெரிய பட்டிணம் இராமநாதபுரம் செல்லும் மெயின் ரோடு

என்றால் சரிதான். இராமேஸ்வரம் முதல் திருப்புல்லாணி வரை செல்லும் ஜங்சன் சாலை என்றால் சரிதான். மேற்படி இடத்தில் எப்போதும் போக்குவரத்து மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். கடல் அட்டைகளை எந்த வகையான கடல் அட்டை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எல்லா கடல் அட்டைகளும் தடை செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடல் அட்டைகள் அழுகிய நிலையில்இருந்தது என்றால் சரிதான். அழுகிய நிலையில் இருந்த கடல் அட்டைகளை விற்பனைக்காக பயன்படுத்த முடியுமா என்றால் மருத்துவத்திற்காக பயன்படுத்தலாம். கடல் அட்டையின் அறிக்கையில் அழுகிப்போன கடல் அட்டைகளை எதற்கும் பயன்படுத்த முடியாது என்று குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிரி தொடர்ந்து வழக்கு பதிவு செய்ததால்காவல் உயர் அதிகாரிகள் மீதும் அதிகாரிகள் மீதும் புகார் செய்தார்களா எனற்ால் எனக்கு தெரியாது. மேற்படி கடல் அட்டைகளை கடத்துவது சம்பந்தமாக தகவல் கொடுத்தது ஜாகீர் உசேன் என்றால் தெரியாது. 1ம் எதிரியின் மீது உள்ள முன்விரோதம் காரணமாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிரியை அவரது வீட்டில் வைத்து கைது செய்து அழைத்து சென்றதற்கான சிசிடிவி புட்ஏஜ் இருக்கிறது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும்எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை
இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No.370/2022**
**Deposition of witness for prosecution –PW-2**

| | | |
|---|---|---|
| Name | : | டேனியல் |
| Father Name | : | அல்வின் |
| Village | : | ஏரல் |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | வனகாப்பாளர் |
| Religion | : | |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 23rd day of July 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி வன சரகத்தில் வன காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சமயத்தில் கீழக்கரை வன உயிரின சரகத்தில் வனகாப்பளராக பணிபுரிந்த போது 13.08.2020ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் வன சரக அலுவலர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி நானும் பிரிவு வனவர் முத்துராம்அவர்களும் வேட்டை தடுப்பு காவலரும் ரெகுநாதபுரம் மயானம் அருகே வாகனத்தை சோதனை செய்தோம். அப்போது TN 65 AE 9127 ஆம்னி கார் வந்தது. அதை சோதனை செய்ததில் நான்கு கருப்பு நிற கேனில் அட்டைகள் இறந்த நிலையில் இருந்தது. நாங்கள் வண்டி ஓட்டுநரை விசாரித்தாதில் அவர் பெயர் அல் உதய் எனவும் அவர் தனது தந்தை ஜாகீர் உசேன் சொன்னதன் பெயரில் அட்டைகளை வண்ணாங்குண்டு பகுதியில் வைத்து அவிப்பதற்காக கொண்டு செல்வது தெரிய வந்தது. அதன்பின்னர் TN 65 4764 எண் பதித்த எமஹா இரு சக்கர வாகனம் ஒன்று வநதது. அதில் வந்தவர் ஜாகீர் உசேன் எனவும் அவரது மகன் தான் சொல்லியதன் பேரில் அட்டைகளை எடுத்து சென்றார் எனவும் கூறினார். நாங்கள் இருவரையும் அவர்கள் வாகனத்தை

கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தார். பின்னர் மேல் நடவடிக்கைக்காக கீழக்கரை வன உயிரின சரகத்திற்கு கொண்டு சென்று வழக்கு பதிவு செய்து என்னால் வன சரக அலுவலர் முன்னிலையில் 2 எதிரியிடமும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 1ம் எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில்உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். 2ம் எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில்உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். கைப்பற்றிய கடல் அட்டைகளை 2173 எண்ணம் கணம் நீதிபதி முன்பாக கொட்டி அழிக்கப்பட்டது. எதிரிகளைநீதிமன்ற காவலுக்கு வன சரக அலுவலர் உட்படுத்தினார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

பெரிய பட்டிணம் வன காப்பாளர் உத்தரவு வாய்மொழியானதா அல்லது எழுத்துபுர்வமானதா என்றா'ல் எழுத்து பூர்வமானது. எழுத்துபூர்வமான உத்தரவை நீதிமன்றதில் சமபர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய பணி ரோந்து செல்வது மட்டும் தான் என்னறால் தவறுகள் நடந்தால் உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொல்வது மற்றும் பிடித்து வைப்பது என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்தமட்டில் சோதனை செய்தது எதிரிகளை கைது செய்தது பொருட்களை கைப்பற்றியது எல்லாம் சேர்ந்து செய்தோம் என்றால் நான் உடன் இருந்தேன். சம்பவம் நடைபெற்ற சமயத்தி'ல் நான் ரெகுநாதபுரத்தில் இருந்தேன். மேற்படி சம்பவம் நடைபெறுவதாக நான் தான் வன அலுவலருக்கு தகவல் சொன்னேன் என்றால் இல்லை. வன அலுவலர் தான் எங்களுக்கு தகவல் சொன்னார். நான் ரெகுநாதபுரத்திற்கு எதற்காக சென்றேன் என்ற விவரம் ஆவணங்களை கணம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் இல்லை. வழக்கமான ரோந்து தான். வழக்கமான ரோந்து என்றாலும் அறிக்கையும் பாக்கெட் டைரியும் நான் பராமரிப்பேன் என்றால் சரிதான். அதை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி கடல் அட்டைகள் நான் பார்க்கும்போது அழுகிய நிலையில் இருந்தது என்றால் இல்லை இறந்த நிலையில் இருந்தது. படிவம் 91 தயார் செய்யும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. படிவம் 91ல் கடல் அட்டைகள் அழுகிய நிலையில் இருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைக்கு

எதிராக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் அடிப்படையில்எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து பொய்யாக ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை
இல்லை.